## இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்துபோய் அ.தி.மு.க.வை அமித்ஷாவிடம் அடமானம் வைத்தவர்!

# ‘சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்’ என முழு பூசணிக்காயை சோற்றுக்குள் மறைத்திருக்கிறார் பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, டிச. 12-

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

10 தேர்தல்களில் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருக்கும் ’தோல்விசாமி’, ”210 தொகுதிகளில் அ.தி.மு.க. வெல்லும்’’ என அ.தி.மு.க. பொதுக்குழுவில் கிச்சு மூச்சு மூட்டியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர். குழந்தைகளைச் சிரிக்க வைப்பதற்காகக் கிச்சு மூச்சு மூட்டுவது போல அதி.மு.க.வினருக்கு உற்சாக மூட்டச் சிரிக்காமல் பொய்யை சொல்லியிருக்கிறார் பழனிசாமி.

**எத்தனை எத்தனை கொடுமைகள்!**

“தி.மு.க. நம் ஆட்சியைப் பற்றி விமர்சிக்க முடியவில்லை. அ.தி.மு.க. பாஜகவோடு கூட்டணி என்றுதான் சொல்கிறார். அப்படியான சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்’’ என தன்னுடைய ஆட்சிக்குத் தானே பொதுக்குழுவில் சான்றிதழ் கொடுத்திருக்கிறார் பழனிசாமி. ஆட்சிக்கு ஆபத்தைத் தடுக்கத் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் 18 பேர் தகுதி நீக்கம், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எதிர்க் கட்சியினர் மீது அவதூறு வழக்குகள், விவசாயிகள் மீது அடக்குமுறை, கொடநாடு கொலைகள், போலீஸ் அதிகாரி விஷ்ணு பிரியா தற்கொலை, கனிமக் கொள்ளைகள், கஜா, ஒகி புயல்களில் காட்டிய மெத்தனம், கூவத்தூர் கூத்துகள், கொரோனா மரணங்கள், கொரோனா பேரிடரிலும் கொள்ளை, சாத்தான்குளம் தந்தை மகன் லாக் அப் டெத், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, கல்லூரி மாணவிகளைத் தவறான வழிக்குத் தூண்டிய பேராசிரியை நிர்மலாதேவி விவகாரம், பொள்ளாச்சி பாலியல் வன்முறைகள், நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷனில் சுவாதி கொலை, அ.தி.மு.க. பேனர் மரணங்கள், ஜல்லிக்கட்டு தடை போராட்டம், சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என எத்தனை எத்தனை கொடுமைகள் நடைபெற்றன. இதையெல்லாம் மறைத்துவிட்டு, ’சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்’ எனச் சோற்றுக்குள் பூசணிக்காயை மறைத்திருக்கிறார் பழனிசாமி.

பழனிசாமி சொல்வது போலவே அது சிறப்பான ஆட்சி என்றால், 2021 சட்டமன்றத் தேர்தலில் அதி.மு.க.வை மக்கள் ஏன் வீட்டுக்கு அனுப்பினார்கள்? தமிழ்நாட்டின் வளர்ச்சியை முடக்கி தமிழ்நாட்டைக் கற்காலத்திற்கு இழுத்துச் சென்ற ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி. அது பொற்கால ஆட்சி அல்ல. தமிழ்நாட்டின் இருண்டகால ஆட்சி. மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் டெல்லியின் காலடியில் அடமானம் வைத்துவிட்டு, நமது பொருளாதார வளத்தைச் சுரண்டும் திட்டங்களுக்கும் சட்டங்களுக்கும் தலையாட்டி கையெழுத்திட்டு துரோகம் செய்ததுதான் பழனிசாமியின் துரோக ஆட்சி.

**வெட்கப்பட வேண்டும்!**

தமிழ்நாட்டின் உரிமைகளை மறுத்தும், நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டியும், வளர்ச்சித் திட்டங்களை முடக்கியும், தமிழர் பண்பாட்டை உலகறிய செய்யும் கீழடி அகழாய்வு முடிவை மறுத்ததும் மட்டுமின்றி தமிழர்களை திருடர்கள் என்றும் கொடுமைக்காரர்கள் என்றும் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக ஒடிசா, பீகார் தேர்தல் போது விமர்சித்துப் பேசிய பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துக் கொண்டு இருப்பதற்கு பழனிசாமி பெருமைப்படக் கூடாது. வெட்கப்படதான் வேண்டும்.

அதேபோல மகளிர் விடியல் பேருந்தில் நமது பெண்கள் பயணிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் லிபஸ்டிக் பஸ் என பெண்களை அவமதிக்கும் வகையில் அநாகரீகமாக நடந்து கொண்ட பழனிசாமி இன்று பெண்களின் நலத்திட்டங்களுக்காக குரல் கொடுத்தேன் என நாடகமாடி உள்ளார். திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் உரிமை தொகை, விடியல் பயணம், புதுமை பெண் போன்ற திட்டங்களைக் கண்டு தாங்கி கொள்ள முடியாத முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் சிவி சண்முகம் “பொண்டாட்டியையும் இலவசமாக கொடுப்பார்கள்” என சொல்லி ஒட்டு மொத்த தமிழ்நாட்டு பெண்களையும் கொச்சைப்படுத்தி பேசினாரே அதை பெயரளவுக்காவது கண்டித்தாரா பழனிசாமி.? இந்த லட்சணத்தில் பெண்களுக்கு ஆதரவாக அ.தி.மு.க. இருப்பது போல பகல் வேஷம் போடுகிறார் பழனிசாமி.

**தமிழ்நாட்டை சீரழித்த பழனிசாமி!**

மேலும், அரைத்த மாவை அரைப்பது போல் பேசிய பொய்களையே பொதுக்குழுவிலும் திரும்பப் பேசியிருக்கிறார் பழனிசாமி. கூவத்தூரில் குறுக்கு வழியில் முதலமைச்சராக ஊர்ந்தெடுக்கப்பட்ட பழனிசாமியால் தமிழ்நாடு அனைத்துத் துறைகளில் படுபாதாளத்திற்குச் சென்றது. தொட்டத் துறைதோறும் ஊழல், கொடநாடு தொடங்கி தூத்துக்குடி வரை சீரழிந்து கிடந்த சட்டம் ஒழுங்கு, பாஜகவின் கண்ணசைவிற்கு இசைந்து நடந்து தமிழ்நாட்டின் உரிமைகள் தாரை வார்ப்பு, அடிமை அ.தி.மு.க. ஆட்சியின் அவலட்சணங்களை எதிர்த்துப் போராடியவர்கள் மீது குண்டர் சட்டம் முதல் துப்பாக்கிச் சூடு வரை நடத்தி அடக்குமுறை, செய்தி நிறுவனங்கள் மீது அவதூறு வழக்குகள் எனத் தமிழ்நாட்டைச் சீரழித்த பழனிசாமியை மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிடவில்லை. அதனால்தான் மக்கள் தொடர்ந்து 10 தேர்தல்களில் அவரை தோற்கடித்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழ்நாட்டைத் தலை நிமிர வைத்திருக்கும் திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பொறுக்க முடியாமல் பொதுக்குழுக் கூட்டம் கூட்டிப் பொருமியிருக்கிறார். பழனிசாமியின் அர்த்தமற்ற அவதூறுகளால் தி.மு.க.வை அசைத்துக் கூட பார்க்க முடியாது. இனியும் இந்தப் பொய்கள் மக்களிடம் எடுபடும் என நினைத்து பகல் கனவில் மிதந்து கொண்டிருக்கிறார்.

**பொதுக்குழுவில் புலம்பல்!**

“நாட்டு மக்களுக்காகச் சூழ்நிலை கருதி பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்தோம். பா.ஜ.க-வுடன் இனி கூட்டணி இல்லை” என்று 2024 ஆம் ஆண்டு ஜனவரியில் மதுரையில் நடந்த SDPI கட்சி மாநாட்டில் வீர வசனம் பேசிய பழனிசாமி, மீண்டும் பாஜகவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு அதற்கு நியாயம் கற்பிக்கப் பொதுக்குழுவில் புலம்புவதைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது.

“அடுத்த 100 நாட்களில் தி.மு.க. அமைச்சர்கள் பத்திரமான இடத்துக்குப் போவார்கள்” என ஜோதிடம் சொல்லியிருக்கிறார் பழனிசாமி. தன்னுடைய உறவினர்கள் வீட்டில் நடந்த இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்து போய் அதி.மு.க.வை அமித்ஷாவிடம் பத்திரமாக அடமானம் வைத்த பழனிசாமி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

**செந்தில் காமெடி போல் பேசியிருக்கிறார்!**

“2019 எம்பி தேர்தலில் 39 நாடாளுமன்றத் தொகுதியில் ஒன்றில் தான் வென்றோம், அப்போது நடந்த 22 சட்டமன்றத் தொகுதிகள் இடைத் தேர்தலில் 9 இடங்களில் வென்றோம்” என புள்ளிவிவரம் சொல்கிறார் பழனிசாமி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ-களால் ஆட்சிக்கு ஆபத்து என்றதும் அவர்களைத் தகுதிநீக்கம் செய்தார்கள். அந்தத் தொகுதிகளுக்கும் சேர்த்து அப்போது இடைத் தேர்தல் நடைபெற்றது. அறுதிப் பெரும்பான்மையை இழந்துவிடுவோமோ, ஆட்சி கவிழ்ந்துவிடுவோமோ என அஞ்சி அந்த 9 தொகுதிகளில் மட்டுமே குறியாக வேலை பார்த்து வென்றார்கள். ’’நான் ஏழாவது பாஸ்னே. நீங்க எஸ்.எஸ்.எல்.சி ஃபெயிலுனே. பாஸ் பெருசா ஃபெயில் பெருசா’’ என செந்தில் காமெடி போலப் பேசியிருக்கிறார் பழனிசாமி.

**அ.தி.மு.க.வினரே நம்ப மாட்டார்கள்!**

“2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 நாடாளுமன்றத் தொகுதிகளை தி.மு.க.தான் வென்றது. ஆனால், நாடாளுமன்றத் தொகுதிக்குள் இருக்கும் 10 சட்டமன்றத் தொகுதிகளில் அதி.மு.க.வே அதிக வாக்குகள் பெற்றது. அப்போது அ.தி.மு.க. மற்றும் பாஜக கூட்டணி வாங்கிய வாக்குகள் இரண்டையும் சேர்த்தால் 41.33 சதவிகிதம். எனவே, வருகிற தேர்தலில் 210 இடங்களில் அ.தி.மு.க. கூட்டணி வெல்லும்” என அரித்மெட்டிக் கணக்கு போட்டிருக்கிறார் பழனிசாமி.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக, அ.தி.மு.க. தனித் தனியாகக் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. பாஜக கூட்டணியில் பாமக, அமமுக, பன்னீர்செல்வம். தமாகா, புதிய நீதிக் கட்சி, ஐ.ஜே.கே, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள் இடம்பெற்றன. இப்போது அ.தி.மு.க. கூட்டணியில் பாஜக, தமாகா தவிர வேறு எந்தக் கட்சிகள் இருக்கின்றன? அன்றைக்கு அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த எஸ்.டி.பி.ஐ விலகிவிட்டது. தேமுதிகவின் நிலை உறுதியாக வில்லை. அதுமட்டுமின்றி 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவோடு கூட்டு சேர்ந்து அ.தி.மு.க. நின்றிருந்தாலும் தி.மு.க. கூட்டணியை வென்றிருக்க முடியாது, இனியும் வெல்ல முடியாது என்பது தமிழ்நாட்டில் நேற்று பிறந்த பிஞ்சுக் குழந்தைக்குக் கூட தெரியும். நிலைமை இப்படியிருக்க நீங்கள் அடித்து விடும் பொய்க்கணக்கை அ.தி.மு.க. வினரே நம்பமாட்டார்கள் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

---

நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில்

# திருமதி சுப்ரியா சாகுவின் பணிகள் தொடர - ஐ.நா.விருது பெரும் ஊக்கமாக அமையும்!

## ஐ.நா.விருது பெற்றதையொட்டி – வெளியிட்ட வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



சென்னை, டிச. 12-

திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்கள், காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக ஐ.நா. விருது வழங்கப்பட்டதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், “நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில், திருமதி சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களின் பணிகள் தொடர, ஐ.நா.விருது பெரும் ஊக்கமாக அமையும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்களுக்கு ஐ.நா. விருது: தமிழ்நாடு பெருமை கொள்கிறது!**

**காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக UNEP அமைப்பின் Champions Of The Earth விருதினை வென்றுள்ள தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் & வனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்களுக்கு எனது பாராட்டுகள்!**

**ஈரநிலப் பாதுகாப்பு, அலையாத்திக் காடுகள் பரப்பை அதிகரித்து வருதல், அருகி வரும் அரிய உயிரினங்களைக் காத்தல், ப்ளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் உள்ளிட்ட நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில் அவரது பணிகள் தொடர இவ்விருது பெரும் ஊக்கமாக அமையும் என நம்புகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை

# வெற்றி பெற்ற ஜெர்மனி அணிக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, டிச. 12-

ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பையை வென்ற ஜெர்மனி அணிக்குப் பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பையை வென்ற ஜெர்மனி அணிக்குப் பாராட்டுகள். கடுமையாகப் போராடிய ஸ்பெய்ன் அணிக்கும் பெரிய கைதட்டலை உரித்தாக்குகிறேன். முழு ஆற்றலை வெளிப்படுத்திப் போராடிய இந்தியா, அர்ஜென்டினா அணிகளும் நம் மதிப்பினை வென்றுள்ளன.**

**தமிழ்நாடு மீண்டுமொரு முறை பன்னாட்டளவில் தனது திறனையும், உலகத்தரத்திலான தொடர் நடத்துவதையும், இனிய விருந்தோம்பலையும், விளையாட்டுத் துறையில் உயர்வினை ஊக்குவிக்கும் சிறந்த சூழலையும் நிரூபித்து விட்டது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

நீலகிரி - பந்தலூர் வட்டத்தில்

# புதிய வட்டச் செயல்முறை கிடங்கு வளாகம்!

## கா.ராமச்சந்திரன் - முன்னணியினர் பங்கேற்பு!

நீலகிரி, டிச. 12-

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நீலகிரி மாவட்டம் - பந்தலூர் வட்டத்தில் 2500 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.450 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்ட செயல்முறை கிடங்கு வளாகத்தை திறந்து வைத்ததனை தொடர்ந்து அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

உடன் நுகர் பொருள் வாணிப கழகத்தின் மண்டல செயலாளர் கௌரிமணவாளன், கூடலூர் கோட்டாட்சியர் குணசேகரன், பந்தலூர் வட்டாட்சியர் சர்புதீன் நிஷா, ஆணையாளர் சக்திவேல், மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் கூடலூர் தொகுதி பார்வையாளர் பரமேஷ் குமார், செயற்குழு உறுப்பினர்கள் மு.திராவிட மணி, எஸ்.காசிலிங்கம், நெல்லியாளம் நகரமன்றத் தலைவி சிவகாமி, துணைத் தலைவர் நாகராஜ், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் ராஜேந்திரன், பந்தலூர் நகரச் செயலாளர் சேகரன், துணைச் செயலாளர் சிவசுப்பிரமணி, பொருளாளர் தென்னரசு, பந்தலூர் மத்திய ஒன்றிய செயலாளர் மாங்கோடு ராஜா, கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் பாபு, கூடலூர் ஒன்றிய செயலாளர் உத்தமன், மாவட்ட பிரதிநிதிகள் குமார் நாகராஜ், கணபதி, சந்துரு, துணைச் செயலாளர் பாக்கியநாதன், அவைத் தலைவர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமை ப்பாளர் ஆலன் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முரளிதரன், மகளிர் அணி துணை அமைப்பாளர் வெண்ணிலா, உட்பட அணைகளின் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அரசுத் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள் பலர் உடன் இருந்தனர்.

---

பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய

# ‘தெற்கே முழங்கும் திராவிடம்’ - கவிதைத் தொகுப்பு!

## பேராசிரியர் மா.செல்வராசன் தலைமையில் – திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிடுகிறார்!

*சென்னை, டிச. 12 -*

*பாவலர் கடவூர் மணிமாறன் இயற்றிய ‘தெற்கே முழங்கும் திராவிடம்’ கவிதைத் தொகுப்பினை பேராசிரியர் மா.செல்வராசன் தலைமையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் வெளியிடுகிறார்!*

*அதன் விவரம் வருமாறு:*

*தனித்தமிழ் இயக்கத்தின் தனிச் சிறப்புப் பாவலர், பாவேந்தர் பாரதிதாசன் பெரும்பற்றாளர், தமிழகம் அறிந்த தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர் கடவூர் மணிமாறன் எழுபது நூல்களுக்குமேல் இயற்றியவர் . அவரது ‘தெற்கே முழங்கும் திராவிடம்’ என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா, சென்னை பெரியார் திடல் மணியம்மை அரங்கில் நாளை ( 13.12.2025 - சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது!*

*வெளியீட்டு விழாவிற்குச் சென்னைப் பல்கலைக்கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் தலைமை தாங்குகின்றார்.*

*கருவூர் மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் ப.குமாரசாமி முன்னிலையில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுகின்றார்.*

*முதல் படியை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் பொன்.செல்வ கணபதி பெற்றுக்கொண்டு உரையாற்றுகின்றார்.*

*மேலும் முனைவர் வி. பொ.பா.தமிழ்ப்பாவை, இரா.உமா, தி.பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்*

*வெ.அறிவுக்கண்ணன் வரவேற்பு நல்க, முனைவர் கனிமொழி நிகழ்வுரை தர, இராம.சந்திரசேகரன் நன்றி நவில நூலாசிரியர் பாவலர் மணிமாறன் ஏற்புரையாற்றுகிறார்.*

*ஆர்வலர்கள் வருகை தருமாறு திராவிட இயக்கத் தமிழர் பேரவை அழைக்கின்றது.*

---

புதுவையில் 13–ஆம் தேதி தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிக் கூட்டம்!

# 23 தொகுதிகளைச் சேர்ந்த 730 முகவர்கள் பங்கேற்பு!

## அமைப்பாளர் இரா.சிவா அழைப்பு!



*புதுச்சேரி, டிச.12-*

*புதுச்சேரியில் நாளை (13-ஆம் தேதி) நடைபெறும் வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் பயிற்சிக் கூட்டத்தில் புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுதிகளில் தி.மு.க. சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று திமுக அமைப்பாளர் இரா.சிவா அழைப்பு விடுத்துள்ளார்.*

*புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுதிகளுக்கான தி.மு.க. செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.*

*மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் தலைமை வகித்தார். துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சிவா கலந்து கொண்டு, ஆலோசனைகள் வழங்கினார். அப்போது, 13-ஆம் தேதி தலைமைக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் புதுச்சேரி தி.மு.க. வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் பயிற்சிக் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தொகுதி வாரியாக தி.மு.க. சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் தவறாமல் கலந்து கொண்டு, பயிற்சி பெறவும், அப்பணியை தொகுதி செயலாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.*

*இதில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, நந்தா. சரவணன், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், காந்தி, அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், பிரபாகரன், சக்திவேல், சண்முகம், வேலவன், தர்மராஜன், மாறன், செந்தில்வேலன், செந்தில்குமார், நர்கீஸ், தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், பசுபிக் சங்கர், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன், சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், மணிகண்டன், சக்திவேல், சிவக்குமார், ஆறுமுகம், வடிவேல், சக்திவேல், ராஜாராமன், இளஞ்செழியபாண்டியன், ராதாகிருஷ்ணன், கலைவாணன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, விளையாட்டு மேம்பாட்டு அணித் தலைவர் ரவிச்சந்திரன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு, மாநில துணை அமைப்பாளர்கள் முகிலன், தாமரைக்கண்ணன், தேவேந்திரன், சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

---



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அரளிக் கோட்டையில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி” பிரச்சாரத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவு துறை – அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் எஸ்.ஐ.ஆர்.குறித்து விளக்கி பேசினார். உடன் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.சுந்நரராஜன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், ஒன்றிய செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார் மற்றும் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.